பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 09 செவ்வாய்க்கிழமை 23.01.2024 கதிர் 77

# புலிகள் காலத்து நிலையை எட்ட மீள வரும்படி கூட்டமைப்புச் சகாக்களுக்கு சிறீதரன் அழைப்பு

### ஊடகங்களுக்கு நேற்று அறிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் காலத்தில் - 2009 ஆண்டுக்கு முன்னர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு இருந்ததோ அவ்வாறான நிலையை - தமிழ் மக்களின் அரசியல் ஏகப்பிரதிநிதிகள் என்ற நிலையை - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எய்த வேண்டும் எனவே தமிழ்த் தேசியத்தை நேசிக்கும்சகலதமிழ்கட்சிகளும் தம் கட்சிகளின் நலனை முன்னிறுத்தாமல் மக்கள் நலனை முன்னிறுத்தி தமிழ் தேசியத்தின் பாதையில் ஓரணியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றிணையுமாறு அழைக்கின்றேன்.

இவ்வாறு இலங்கை தமிழரசு கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள ☞2

## இது ரகசியம் அல்ல!

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தனது பொறுப்புக்களை ஏற்ற பின்னர் சம்பிரதாயபூர்வமாகமகாநாயக்கர்கள் எல்லோரையும் சந்தித்து ஆசி பெற்றதன்பின்னர்தமிழ்க்கட்சிகளின் தலைவர்களைநேற்றுசந்தித்துள்ளார். அந்த முதல் சந்திப்பிலேயே அவர் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளில் பெரும்பாலானவற்றை ஓரணியில் திரட்டியி-ருக்கிறார். அதாவது கூட்டமைப்புஎன்கிறபடகில்முன்னப் பின்னப் பயணித்த கட்சிகள் அனைத்தும்இவ்வாறுஇந்தியாவால் ஒன்றுதிரட்டப்பட்டிருக்கின்றது.

நேற்றைய கூட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் கொங்கிரஸ், ரெலோ, ஈபிஆர்எல்எவ் ஆகிய கட்சிகள் ☞2

## பொலிஸார் - பொதுமக்கள் உறவு வலுப்பட்டிருக்கிறதாம்

யுக்திய செயற்றிட்டத்தினை அடுத்து பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையிலான உறவு வலுவடைந்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

யுக்திய நடவடிக்கை சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது. இதனால் பொலிஸாருக்கும், பொதுமக்களுக்கும் இடையிலான உறவு மீளப் ☞2

### பணம் இல்லையென்றால் அதைக் கொடுத்து

# வடக்கு கிழக்கு மாகாணங்களுக்காவது தேர்தலை நடத்த அழுத்தம் கொடுக்குக

### இந்தியத் தூதுவரிடம் தமிழ்க் கட்சிகள் வலியுறுத்து



புதிதாகப் பதவியேற்றுள்ள இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளின் பிரதிநிதிகள் அனைவரையும் ஒன்றாக அழைத்துச் சந்தித்துப் பேசியுள்ளார். தமிழ் மக்கள் கூட்ட ணியின் தலைவர்விக்னேஸ்வரன் மற்றும்புளொட்தலைவர் சித்தார்த்தன் தவிர்த்து ஏனைய தலைவர்கள் அனைவரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் இனப்பிரச்சினைகான நிரந்தரமான தீர்வினை வழங்குவதற்கு அழுத்தமளிக்குமாறு இலங்கைக்கான இந்தியாவின் புதிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிடத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு மட்டுமாவது தேர்தலை நடத்துவதற்கு இலங்கை அரசுக்குஅழுத்தம் ☞2

# நிகழ்நிலை காப்பு சட்டத்துக்கு மேற்பார்வைக் குழு அனுமதி

உயர் நீதிமன்றத்தினால்முன்வைக்கப்பட்ட திருத்தங்களுக்குஅமைய உத்தேச நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்தை நிறைவேற்ற ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும்புதியபிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அங்கீகரித்துள்ளதாக அக்குழுவின் தலைவர் நாடாளுமன்றஉறுப்பினர் லலித் வரன்குமார தெரிவித்துள்ளார்.

ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள்பற்றியதுறை சார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் நாடாளுமன்றஉறுப்பினர் லலித் வர்ண குமார தலைமையில் நேற்று நாடாளுமன்றத்தில் கூடியபோதே குறித்த அங்கீகாரம் வழங்கப் பட்டது.

இந்தக்கூட்டத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, ☞2

# டெங்கை கட்டுப்படுத்த பொதுமக்களின் ஆதரவு இன்னும் அதிகமாகத் தேவை

### அமைச்சர் ரமேஷ் பத்திரன தகவல்



வேகமாகப் பரவி வரும்டெங்கு நோயைக் கட்டுப்படுத்த விசேட அவதானத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் துறையினரின் ஆதரவு கிடைத்துள்ள போதிலும், இது தொடர்பாக பொதுமக்களின் ஆதரவு இப்பொழுதுள்ளதை விடவும் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் மருத்துவர் ரமேஷ் பதிரண தெரி வித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்ற செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதே ☞2

# சட்ட வரைவுகளை எதிர்த்து மட்டக்களப்பில் போராட்டம்




நிகழ்நிலை காப்புச் சட்ட வரைபு, பயங்கரவாதஎதிர்ப்புசட்ட வரைபு சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து மட்டக்களப்பில் நேற்று எதிர்ப்புப் பேரணியும் ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டன. அத்துடன் அடையாள ☞2

# நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை எதிர்த்து இன்று பெரும் போராட்டம்

### நாடாளுமன்ற சுற்றுவட்டத்திற்கு முன்பாக நடக்கும்

நாடாளுமன்ற சுற்றுவட்டத்திற்கு முன்பாக இன்று காலைஎட்டுமணிக்கு பெரும் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப் படவுள்ளது.

நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்ட மூலம் இன்றைய தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ள நிலையிலேயே இந்த போராட் டத்தை நடத்தத்திட்டமிடப் பட்டுள்ளது.

குறிப்பாக பொது மக்களின் கருத்துச் சுதந்திரத்தினை உறுதிப் படுத்துவதை நோக்காகக்கொண்டு இந்துப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்துப்போராட்டத்தில்சிவில்அமைப்பின் பிரதி நிதிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்றம் தொடர்பான செய்திகள் பொய்யானவை

### செயலாளர் நாயகம் விளக்கம்

நாடாளுமன்றத்தில் பெண்ஊழியர்களுக்கும் ஒரு சில பெண் உறுப்பினர்களுக்கும்தொடர்ந்து பாலியல்துன்புறுத்தல்கள் இடம்பெற்று வருவதாகவும், அது தொடர்பில் உரிய விசாரணைகள் மற்றும்நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என்றும் வெளியாகும் தகவல்கள் முற்றிலும் பொய்யானவை என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஒழுக்கமீறல் சம்பவங்களின்போது, அதுதொடர்பான விசாரணைகள் கௌரவ சபாநாயகரின் வழிகாட்டுதலின் கீழ் மிகவும் பக்கச்சார்பற்ற முறையில் மேற்கொள்ளப்படுவதாகவும், விரைவான விசாரணைகளுக்கு சபாநாயகர் தனது அதிகபட்ச பங்களிப்பை வழங்குகிறார் எனவும், எந்த விதத்திலும் அதில் தலையிடுவதோ அல்லது செல்வாக்குச் செலுத்துவதோ இல்லை எனவும் குஷானி ரோஹணதீர வலியுறுத்தினார்.

ஒரு சில பெண் ஊழியர்களுக்கு பாலியல் துன்புறுத்தல் மேற்கொள்ளப்பட்ட சம்பவமொன்று பதிவாகியிருந்தாலும், அது தொடர்பாக ☞2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

பங்கெடுத்திருந்தன. அழைப்பு அனுப்பப்பட்டும் தனிப்பட்ட காரணங்களால் புளொட் தலைவர் சித்தார்த்தனால் சந்திப்பில் கலந்துகொள்ள முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரனுக்கு இந்தச் சந்திப்புக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்றும் தெரிகின்றது. ஒருவேளை எதிர்காலத்தில் அவரும்கூட இத்தகைய சந்திப்புக்களுக்கு மற்றவர்களுடன் சேர்த்து அழைக்கப்படக்கூடும்.

இந்தச் சந்திப்பு இந்தியத் தரப்பிலிருந்து ஒ - ரு விடயத்தை வெளிப்படையாகத் தெரிவிக்க முயற்சிக்கின்றது. தமிழ்த் தேசியம் பேசுகின்ற தரப்புக்கள் அனைத்தையும் இந்தியா ஒன்றாகவே கையாள விரும்புகின்றது என்பதுதான் அது. இந்தக் கட்சிகள் எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள், அவற்றுக்கிடையில் கொள்கை வேறுபாடுகள் எதுவும் கிடையாது, எனவே இவற்றோடு தனித்தனியே நேரம் செலவிடுவதில் பயனில்லை என்று இந்தியா கருதுகின்றது என்தே செய்தி.

இந்தியாவிலும் தேர்தல் வரவிருக்கின்றது. இலங்கையிலும் தேர்தல்கள் வர இருக்கின்றன. இந்த நிலையில் கூட்டணிகள், ஒற்றுமைகள் குறித்து ஒருவித சாதகப் போக்குகளை பார்க்க முடிவதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. அதற்கேற்றாற்போல தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவரும் நேற்று ஒரு அறிக்கையை விடுத்திருந்தார். அதில் தமது முன்னாள் சகாக்கள் அனைவரையும் மீண்டும் ஒன்றிணைய வருமாறு கேட்டிருந்தார்.

முன்னாள் சகாக்கள் என்கிறபோது அவர் தமிழ்க் கொங்கிரஸையும் சேர்த்தேதான் அழைத்திருக்கிறார். அந்தக்கட்சியோ இதுவரையில் தமிழ் அரசுக்கட்சியின் நிலைப்பாடுகள் எல்லாவற்றுக்கும் மாறான நிலைப்பாட்டை எடுத்து வந்திருக்கக்கூடிய ஒருகட்சி. இவர்கள் ரணிலோடு பேச்சுக்குப் போனால் அவர்கள் போகமாட்டார்கள், இவர்கள் பொது வேட்பாளர் என்றால் அவர்கள் ஜனாதிபதித் தேர்தலையே புறக்கணிப்போம் என்பார்கள். இப்படி ஏட்டிக்குப் போட்டியான கட்சிகளை எல்லாம் சகட்டுமேனிக்கு வா வா என்று அழைத்தால் எப்படி வந்து ஒட்டிக்கொள்ளும் என்பது தெரியவில்லை. ஒருவேளை கொங்கிரஸின் நிலைப்பாட்டை தமிழ் அரசுக் கட்சியும் மற்றைய கட்சிகளும் ஏற்றுக்கொண்டால் இந்த ஒற்றுமை சாத்தியமாகக்கூடுமாக இருக்கலாம்.

ஆனால், கொங்கிரஸின் அந்த அரசியல் நிலைப்பாடு ரணிலை ஆட்சியில் தொடரவைப்பதே இருப்பதில் சிறந்த தெரிவு என்று நினைக்கும் மேற்குலகு மற்றும் இந்தியக் கொள்கைகளுடன் நெருங்கிச்செல்லாது. பின்னர் எப்படி இந்தத் தரப்புக்கள் அனைத்தும் இணைந்து செயற்படப்போகின்றன என்பதைப் பார்ப்பதே அடுத்து வரும் வருடங்களில் இருக்கப்போகும் வேடிக்கை வினோத நிகழ்ச்சிகளாக இருக்கப் போகின்றன.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கான தேர்தலில் வெற்றிபெற்று புதிய தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட சிறீதரன், இந்தத் தேர்தல் தொடர்பிலும் தமிழ் அரசுக் கட்சியின் எதிர்கால நிலைப்பாடு தொடர்பிலும் ஊடகங்களுக்கு நேற்று விடுத்த அறிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்தவேண்டும் என்பதே எனது பெருவிருப்பம். அதனை முன்னிறுத்தியே தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கான போட்டியில் நின்று, இப்போது தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளேன். இந்த நிலையில் தமிழ் அரசுக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் புத்துயிரூட்டுவதே என் முன்னுள்ள முதற்பணியென எண்ணுகிறேன்.

தமிழ் மக்களின் உரிமைக்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக குரல் கொடுத்த, மக்களுக்காக அரசியல் பணி செய்த சக தமிழ்த் தேசியக் கட்சிகள் சிலபல காரணங்களால் பிரிந்து தனிவழியே பயணிக்கின்றன. இது எமது பொது எதிரிக்கே சாதகமானது.

அதன் விளைவை கடந்த தேர்தல்கள் எமக்கு உணர்த்தியிருந்தன. 2009க்கு முன்னர் கூட்டமைப்புஎப்படித் தமிழ்மக்களின் அசைக்கமுடியாத சக்தியாக மிளிர்ந்ததோ, அதே நிலையை மீண்டும் எட்டவேண்டும் என்பதே தமிழ் மக்களின் பெருவிருப்பம்.

எனது விருப்பமும் அதுவே. இப்போது அதற்கான காலம் கனிந்துள்ளது. இதற்காக அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் கடந்தகாலகசப்பானநினைவுகளைக் களைந்து ஒன்றிணையுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

தமிழ்மக்களின் நலனுக்காகவும் தமிழ்த்தேசியத்தின் நலனுக்காகவும் ஓரணியில் ஒன்றித்திருப்பது எம்முன்னால் உள்ள பெரும் பொறுப்பு. அதற்காக தமிழரசுக் கட்சி மட்டுமல்லாது, சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஓரணியில் திரண்டு உழைக்கவேண்டும். சகல தமிழ்த் தேசியக் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் செயற்பாட்டை துரிதகதியில் முன்னெடுக்கவுள்ளேன். அதன் மூலம் மக்களின் உரிமைகளையும், மாவீரர்களின் கனவுகளையும் வென்றெடுப்போம் என்றார்.

## நிகழ்நிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமா அதிபர் திணைக்களம், சட்டவரைஞர் திணைக்களம், இலங்கை பொலிஸ் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

அத்துடன், குழுவின் உறுப்பினர்களான கயந்த கருணாதிலக, ஜயந்த கெட்டகொட, சஞ்சீவ எதிரிமான்ன, ஜகத் சமரவிக்ரம ஆகியோருடன் குழுவின் தலைவருடைய அனுமதியுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்ரமரத்ன மற்றும் சந்திம வீரக்கொடி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சட்டமூலம் தொடர்பில் ஆராய்ந்து திருத்தங்களை முன்மொழிவதற்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுவதாகவும், இது தொடர்பில் கொள்கை ரீதியான விடயங்கள் திருத்தங்களுக்கு உள்ளாக வேண்டி இருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களான கயந்த கருணாதிலக, இரான் விக்ரமரத்ன மற்றும் சந்திம வீரக்கொடி ஆகியோர் சுட்டிக்காட்டினர்.

நிகழ்நிலைகாப்புச்சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றாது மேலும் கால அவகாசம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து உறுப்பினர்கள் கூறும் விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்திற்குத் தெரியப்படுத்தப்படும் என்று குழுவின் தலைவர் லலித் வரன்குமார தெரிவித்துள்ளார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்குமாறு கோரியதோடு, அதற்கு இலங்கை அரசு நிதியில்லை என்று கூறுமாக இருந்தால் அந்நிதியை இந்தியா வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

இதில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தன், முன்னாள் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, புதிய தலைவர் சிவஞானம் சிறீதரன், தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சித் தலைவர் சுரேஷ்பிரேமச்சந்திரன், ரெலோவின் செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சாள்ஸ் நிர்மலநாதன், சாணக்கியன், வினோநோதராதலிங்கம் ஆகியோர் பங்கேற்றனர்.

## டெங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆண்டின் முக்கிய எதிர்பார்ப்பாகும். ஆரம்ப சுகாதார சேவைகளை மேம்படுத் துவதன் மூலம் நோயாளிகளுக்கு மிகவும் தரமான சேவையை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு அவசியமான நிதி ஒதுக்கீடுகளை உடனடியாக வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

தொற்றா நோய்கள் தொடர்பில் இலங்கை பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது. 20% இற்கும் அதிகமான மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். தெற்காசிய பிராந்தியத்தில் 35 வயதுக்கு மேற்பட்டவர்களில் அதிகளவில் உயர்குருதி அழுத்தம் உள்ளவர்கள் உள்ள நாடாகவும் இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது. உயர் குருதி அழுத்தம் தொடர்பான சிக்கல்களில் இதய நோய் மற்றும் பக்கவாதம் போன்ற பல நோய்கள் அடங்குகின்றன.

வேகமாக முதுமையடையும் மக்கள்தொகை கொண்ட நாடென்ற வகையில், நினைவாற்றல் குறைபாடு, கண் நோய்கள், எலும்பு நோய்கள் போன்ற பல நோய்கள் ஏற்படுகின்றன. எனவே, தொற்றாத நோய்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேகமாகப் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த விசேட அவதானத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் துறையினரின் ஆதரவு கிடைத்துள்ள போதிலும், இது தொடர்பாக பொதுமக்களின் ஆதரவு இப்பொழுதுள்ளதைவிடவும் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது அதிகரித்து வரும் தட்டம்மை நோயைத் தடுக்க பல்வேறு விசேட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளோம். கடந்த சில வாரங்களில், 91% குழந்தைகளுக்கு தடுப்பூசிகளை ஏற்ற முடிந்தது.

தற்போதுள்ள மருந்துப் பற்றாக்குறையை போக்குவதற்கு பெருமளவிலான அத்தியாவசிய மருந்துகளை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மருந்து தட்டுப்பாடு படிப்படியாக குறைந்து வருகிறது என்றே கூற வேண்டும். எதிர்காலத்தில், மருத்துவ விநியோகத் துறையையும், கொள்முதல் செயல்முறையையும் வெளிப்படையானதாக மாற்ற ஒன்லைன் முறையைப் பயன்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்காக ஏற்கனவே மொரட்டுவை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களின் கணினி துறைகளுடன் சுகாதார அமைச்சு கலந்துரையாடிவருகின்றதுஎன்றார்.

## பொலிஸார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான உறவுகள் மோசமடைந்திருந்த. ஆனால் அந்த நிலைமைகள் இப்போது மாறியுள்ளன.

விசேடமாக வீதிப்போக்குவரத்து ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற பொலிஸார் தொடர்பில் பலவிதமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவை தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

குறிப்பாக, வெளிநாடுகளில் எவ்வாறு பொலிஸார் செயற்பாடுகளின்றார்கள் என்று பார்ப்பதன் ஊடாக அடுத்தகட்டச்செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.

## நாடாளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட்ட உள்ளகக் குழு மிகவும் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி அந்த விசாரணை அறிக்கை தற்போது தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அத்துடன், இதில் தொடர்புடையதாகச் சந்தேகிக் கப்படும் பிரதான அதிகாரி பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கமைய, அது தொடர்பான எதிர்கால நடவடிக்கை கள் உடனடியாக எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். மேலும், இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சட்டத்தை அமுல்படுத்துவதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

இந்தத் துன்புறுத்தல் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவருக்குக் கடிதம் மூலம் அறிவித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று வெளியாகும் செய்தி முற்றிலும் பொய்யானது என்றும், அவ்வாறான கடிதமொன்று இதுவரை எதிர்க்கட்சித் தலைவருக்குக் கிடைக்கப் பெறவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் உறுதி செய்துள்ளதாகவும் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற செயலகத்தின் தலைமைப் பொறுப்பான செயலாளர் நாயகப் பதவியை ஒரு பெண்ணாகிய தான் வகிப் பதும், நாடாளுமன்றத்தில் பல திணைக்களங்களின் தலைவர்களாக வருவதற்குப் பெண்களுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளதும், பெண்களுக்குத் தமது கடமைகளை எந்தவித செல்வாக்கு மற்றும் துன்புறுத்தல்களும் இன்றி மேற்கொள்வதற்கான சூழல் மற்றும் கலாசாரம் நாடாளுமன்றத்துக்குள் இருப்பதே காரணம் என செயலாளர் நாயகம் மேலும் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான நிலையில், இலங்கை நாடாளுமன்றம் மற்றும் கௌரவ சபாநாயகர் ஆகியோரின் நற்பெயருக்குச் சேதம் விளைவிக்கும் வகையில் முற்றிலும் பொய்யான, இட்டுக்கட்டப்பட்ட மற்றும் அடிப்படையற்ற தகவல்கள் வெளியிடப்படுவது தொடர்பில் மிகவும் வருந்துவதாகவும், அவ்வாறான செய்திகளை வன்மையாகக் கண்டிப்பதாகவும் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

## சட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்ணாவிழிரதப் போராட்டமும் இடம்பெற்றது.

கிழக்கு சிவில் சமூகப் பிரதிநிதிகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பேரணியில் கிழக்கின் பல பகுதிகளையும் சேர்ந்த தமிழ் முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு கல்லடிப் பாலம் அருகில் ஆரம்பமான பேரணி காந்தி பூங்கா வரை சென்று அங்கு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தொடர்ந்து கிழக்கு சிவில் பிரதிநிதிகளால் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் நிகழ்நிலைக் காப்புச் சட்டங்களுக்கெதிரானவாசகங்களை எழுதிய பதாதைகளையும் கருத்துச் சுதந்திரத்தின் முக்கியத்துவம் தொடர்பான பதாதைகளையும் ஏந்தியிருந்தனர். ஆர்ப்பாட்டத்தின்போது எதிர்ப்பு கோசங்கள் எழுப்பப்பட்டன.

முக்கியமாக இந்த எதிர்ப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியான உண்ணாவிரதத்துக்கான பந்தலமைப்புகள் பாதுகாப்புத் தரப்பினரால் அகற்றப்பட்டு இறுக்கமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# நவீன சர்வதேசக் கடன் தீர்வின் மாதிரி தற்காலத்திற்கு பொருத்தமாக இல்லை

## 3 ஆவது தென்துருவ மாநாட்டில் ஜனாதிபதி சுட்டிக்காட்டு

உலகளாவிய நிதிக் கட்டமைப்பை மறுசீரமைக்க வேண்டிய அவசரத் தேவையை ஜி77 மற்றும் சீனாவின் 3 ஆவது தென்துருவ மாநாட்டில் வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நவீன கடன் தீர்வு மாதிரி தற்காலத்திற்கு பொருத்தமானதாக இல்லை எனவும் வளர்ந்து வரும் நாடுகளுக்கே இதனால் அநீதி இழைக்கப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

பெரிஸ் கழகம் மற்றும் லண்டன் கழகம் என்பவற்றினால் உலகளாவிய கடன் தீர்வு தொடர்பில் ஆதிக்கம் செலுத்தும் உலகிற்கே நவீன சர்வதேச கடன் தீர்வு மாதிரி உகந்தது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இன்று, உலகளாவிய கடன் மற்றும் குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளில் கடன், பெரிஸ் கிளப்பில் அங்கத்துவர் கடன் வழங்குநர்கள் மற்றும் சர்வதேச பிணைமுறிச் சந்தை ஆகிய தரப்புக்களால் கட்டுப்படுத்தப்படுகிறது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தற்போதுள்ள நிதி வளங்களை கடன் சேவையாகப் பெற்றுக்கொள்ளும் போது, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு அத்தியாவசியமான பொது சேவைகள் மற்றும் மனித அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான செலவுகளுக்கு நிதி வசதிகளை வழங்க முடியாமல் போவதுடன், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் அது பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

உகண்டாவின் கம்பாலா நகரில் ஞாயிற்றுக்கிழமை 77 மற்றும் சீனா 3 ஆவது தென்துருவ நாடுகளின் உச்சி மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

ஐக்கியநாடுகள்சபையில்அங்கம்வகிக்கும் வளர்ந்து வரும் நாடுகளின் மிகப்பெரிய கூட்டணியாக, ஜி77 ஆனது உலகளாவிய தென்துருவ நாடுகளுக்கு தமது கூட்டுப் பொருளாதார நலன்களை வெளிப்படுத்தவும் மேம்படுத்தவும், நாடுகளுக்கு இடையே பரஸ்பர ஒத்துழைப்பு உள்ளிட்ட ஐக்கிய நாடுகளின் அமைப்பிற்குள் சர்வதேச பொருளாதார பிரச்சினைகளை கூட்டாக வாய்ப்பு வழங்குகிறது.

வர்த்தகம், முதலீடு, நிலையான வளர்ச்சி, காலநிலை மாற்றம், வறுமை ஒழிப்பு மற்றும் டிஜிற்றல் பொருளாதாரம் உள்ளிட்ட துறைகளில் அதன் 134 உறுப்பு நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் அதன் 3 ஆவது தென்துருவ நாடுகளின் மாநாடு 'யாரையும் கைவிட மாட்டோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் கூட்டப்பட்டது.

ஜி77 மற்றும் சீன மாநாட்டின் தலைமைப் பதவியைமுன்புகியூபாவகித்ததோடுஇம்முறை அது உகாண்டாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாநாட்டில் மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆற்றிய முழு உரை வருமாறு:-

3 ஆவது தென்துருவ நாடுகளின் மாநாட்டை நடத்தி, 'ஜி77 மற்றும் சீனா' குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள உகாண்டா ஜனாதிபதி யோவேரி முசெவே-னிக்கும் உகாண்டா அரசாங்கத்திற்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

மேலும், கடந்த ஆண்டில் 'ஜி77 மற்றும் சீனா' குழுவிற்கு வழங்கப்பட்ட பயனுள்ள மற் றும் உறுதியான தலைமைக்கு கியூபாவுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

'தற்போதைய சவால்கள்' என்ற தலைப்பில் கியூபாஜனாதிபதிமிகுவல்டியாஸ்-கனெலினால் 2023 செப்ரெம்பரில் ஹவானாவில் கூட்டப்பட்ட அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கவும் ஹவானா பிரகடனத்தை நிறைவேற்றவும் பங்களிக்க முடிந்தமை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். ஜி77 மற்றும் சீனா குழு உருவாகி 60 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், வளர்ந்து வரும் நாடுகளின் மிகப்பெரிய குழுவாக ஒன்றிணைந்து செயற்படுவதும் , நாம் எதிர்கொள்ளும் பல சவால்களை சமாளிக்க உலகளாவிய தெற்கின் நிலைப்பாட்டைத் தொடர்ந்து இன்றியமையாதது. ஜி77 மற்றும் சீனாவின் ஸ்தாபகக் கொள்கைகளான ஒற்றுமை, ஒத்துழைப்பு மற்றும் தடைகளின் நிலையான குறைப்பு என்பன நாம் ஒன்றிணைந்து செயற்படக்கூடிய உறுதியான அடித்தளத்தை உருவாக்குகின்றன.

இன்று உலகம் பல சவால்களை எதிர்கொண்டிருக்கும் வேளையில் நாம் இங்கு சந்திக்கிறோம். மோதல்களின் அதிகரிப்பு, தொற்றுநோய்களின் விளைவுகள், காலநிலை தொடர்பான இயற்கை பேரழிவுகள் மற்றும் உலகளாவிய நிதிச் சந்தைகளில் ஏற்படும் மாற்றங்கள் போன்ற பலவற்றால் இந்த நிலைமைகள் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றன. வரும் இந்த நிலைமைகள், ஜி77 உறுப்பு நாடுகளின் பாதிக்கப்படக்கூடிய பொருளாதாரங்களில் சமமற்றதாகவும் பாதகமாகவும் பாதிப்பை ஏற்படுத்தும்.

மேலும், உலக நிதிக் கட்டமைப்பை முன்னெப்போதையும் விட இப்போது மறுசீரமைக்கப்பட வேண்டிய அவசரத் தேவை உள்ளது. பெரிஸ் கிளப் மற்றும் லண்டன் கிளப் ஆகியவற்றால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட உலகத்திற்கே நவீன சர்வதேச கடன் தீர்வு மாதிரி மிகவும் பொருத்தமானது. இன்று, உலகளாவிய கடன், குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளின் கடன், பெரிஸ் மற்றும் சர்வதேச பிணைமுறிச் சந்தையால் கட்டுப்படுத்தப்படுகிறது.

கையிருப்பிலிருக்கும் நிதி வளங்களை கடன் சேவைகளாகப் பெற்றுக்கொள்ளும் போது பொதுத் தேவைகள், மனித அபிவிருத்திச் செயற்பாடுகள் ஆகியவற்றுக்குத் தேவையான செலவுகளுக்கான நிதியைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது. இதனால் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் இந்த விடயம் தாக்கம் செலுத்துகிறது. தற்போது காணப்படும் பொது வரைவு விரைவில் கடன் தீர்வுகளைப் பெற்றுத் தருவதற்கு போதுமானதாக இல்லை. மேற்படி வரைவு மற்றும் நடைமுறையில் காணப்படும் தன்மைகள் காரணமாக இலங்கை உள்ளடங்களாக நமது நாடுகள்




அனைத்தும் அரச கடன் நெருக்கடிகளை நிவர்த்திப்பதற்கான முயற்சிகளைத் தாமதிக்க வேண்டியுள்ளது.

காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்தல் மற்றும் அவற்றுக்கு ஏற்ப இசைவாக்கம் அடைதலுக்காக தென் துருவ நாடுகளின் தேவைகளைத் தீர்ப்பதற்கான செயற்பாடுகளில் உலக நிதிக் கட்டமைப்பில் பாரிய தோல்விகளைக் காணக்கூடியதாக உள்ளது. காலநிலை நிதி ஒத்துழைப்புக்கள் தொடர்பில் பல்வேறு உலக கலந்துரையாடல்களில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அவற்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை தற்போது வரையில் ஏற்படவில்லை.

மாநாட்டில் காலநிலை வெப்ப வலய முன்மொழிவைச் சமர்பித்தோம். அரச நிதியளித்தல் செயற்பாடுகளின் குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு உயிரியல் பல்வகைத் தன்மை மற்றும் எமது கடல் மற்றும் வன, வளங்கள் உள்ளிட்ட உலக அளவிலான பொது வளங்களை மேம்படுத்துவதற்கான முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் அந்த முன்மொழிவு சமர்பிக்கப்பட்டது.

இன்றளவில் உலக வர்த்தக ஒழுங்குபடுத்தலுக்குள் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த பயன்படுத்தப்படும் வளங்களின் அளவு குறைவதுடன் சுற்றாடல் பாதிப்பை மட்டுப்படுத்துதல், பாதிப்புக்களை தவிர்த்தல் போன்ற எண்ணக்கருக்களுடன் கூடிய எழுச்சியைக் காண முடிகிறது.

உலக வர்த்தக கட்டமைப்புக்குள் ஒரு தலைப்பட்சமான மாற்றங்கள் நிகழக்கூடாது. அவ்வாறான தீர்மானங்களை ஒன்று அல்லது இரண்டு தலைநகரங்களை மாத்திரம் மையப்படுத்தியதாக மேற்கொள்வதை விடுத்து பலதரப்பு கலந்துரையாடல் ஊடாகவே செய்ய வேண்டும்.

நாம் உலக பொருளாதாரம் மற்றும் முதலீடுகளின் இலகுத் தன்மை, உயர்ந்தபட்ச செயற்திறன் ஆகிய-வற்றை உறுதிப்படுத்த வேண்டும். ஜி77 அமைப்பு இந்த செயற்பாடுகளை பிரிக்ஸ் அமைப்பு நாடுகளுடன் ஒருங்கிணைக்க வேண்டும்.

அபிவிருத்தி அடைந்து நாடுகளின் பொருளாதாரத்தில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவது மற்றுமொரு நெருக்கடியாக அமைந்திருக்கிறது. 'தொழில்நுட்ப மாற்றம், உற்பத்தி திறன் ஆகியன, மூலதனத்தை மிகவும் தீவிரமாக்கியுள்ளதுடன் குறைந்தபட்ச உழைப்பையை எதிர்பார்க்கிறது' என்ற ஜோசப் ஸ்டிக்லிடிஸின் கருத்து அதனை சரியாக விளக்குகிறது.

அதற்காக உலக நிதி கட்டமைப்பின் மறுசீரமைப்பை வலியுறுத்தும் அதேநேரம், ஜி77 மற்றும் சீனா உள்ளிட்ட குழுக்கள் எமது அங்கத்துவ நாடுகளுக்கு, வலுசக்தி மற்றும் டிஜிற்றல் பரிமாற்றம், பசுமை பொருளாதாரம் மற்றும் புதிய பொருளாதாரத்திற்காக பயிற்றுவிக்கப்பட்ட தொழில் படையைத் தயார்ப்படுத்த வேண்டும்.

இலங்கை, ஜி77 மற்றும் சீனா உள்ளிட்ட குழுக்கள் இணைந்து, நீதியானதும், சட்டத்திற்கு மதிப்பளிப்பதும், சமத்துவமானதுமான உலகிற்கான நோக்கை அடைந்துகொள்ளவும் பலதரப்புகூட்டுத்தேவைகளைத்தொடர்ச்சியாக முன்னெடுத்துச்செல்வதற்கும்புதியதலைமைத்துவத்தை ஏற்றுகொண்டிருக்கும் யொவேரி முசேவேனியின் தலைமைத்துவத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம்.

எனது உத்தியோபூர்வ விஜயத்தின் போது உகண்டா ஜனாதிபதி எனக்கும் எனது தூதுக்குழுவினருக்கும் அளித்த சிநேகபூர்வமான வரவேற்புக்கு நன்றி எனது உரையை நிறைவு செய்கிறேன்.- என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## கொழும்பில் இன்று முதல் சாரதிகளை கண்காணிக்க சி.சி.ரி.வி. கமராக்கள்

கொழும்பு நகரில் போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளை கண்காணிக்க பொலிஸாரால் புதிய சி.சி.ரி.வி. கண்காணிப்பு கட்டமைப்பு அமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை நேற்று (திங்கட்கிழமை) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி நேற்று முதல் இம்மாதம் 31 ஆம் திகதி வரை கொழும்பு நகரில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

கொழும்பிற்குள் நுழையும் அனைத்து வாகனங்களும் 108 சி.சி.ரி.வி. கமெராக்கள் மூலம் கண்காணிக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிற்குள் நுழையும் 9 இடங்களிலும் சி.சி.ரி.வி. அமைப்பு செயற்பாட்டில் உள்ளதாக சாரதிகளுக்கு முன்கூட்டியே அறிவிக்கும் வகையில் அறிவிப்புப் பலகைகளும் போடப்பட்டுள்ளன.

இந்த நடைமுறையின் ஊடாக போக்கு-வரத்து விதிகளை மீறும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளுக்கு அவர்கள் வசிக்கும் பகுதியிலுள்ள பொலிஸ் ஊடாக அதற்கான தண்டப்பணம் அறிவிடப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (05)

## செல்ல முற்பட்ட கைதி காலி ரயில் நிலையத்தில் கைது

சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் இருந்து தப்பிச் சென்ற மாத்தறை சிறைச்சாலை கைதி ஒருவர் காலி ரயில் நிலையத்தில் வைத்து காலி சிறைச்சாலை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மாத்தறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்னும் சில சிறைச்சாலை கைதிகளுடன் மாத்தறையில் உள்ள பிரிவெனா ஒன்றிற்கு பணி நிமித்தம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் இருந்த நபர் அங்கிருந்து தப்பிச் சென்று தனியார் பஸ் ஒன்றிலிருந்து காலி பிரதேசத்தை வந்தடைந்துள்ளார்.

இதனையடுத்து காலி ரயில் நிலையத்திற்கு வந்த சந்தேக நபர் ரயிலில் ஏற முற்பட்ட போது காலி சிறைச்சாலை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

## கடனை திருப்பிசெலுத்துக இல்லாவிடின் உங்கள் அந்தரங்கப் படங்களைப் பகிரங்கப்படுத்துவோம்

### இணைய வழியில் கடன் பெற்றவரை மிரட்டிய கும்பல்

கொழும்பில் சமீபத்தில் கைதுசெய்யப்பட்ட இணைய கடன் மோசடி பேர்வழிகள் எவ்வாறு தன்னை நெருக்கடிக்குள் சிக்க வைத்தனர் என்பதை பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் விவரித்துள்ளார்.

தன்னை எவ்வாறு மேலும் மேலும் கடன்பெறச்செய்தனர் தன்னால் அதனை திருப்பி செலுத்த முடியாத நிலையேற்பட்டவேளை எவ்வாறு தன்னை மிரட்டினார்கள் என்பதை அவர்

எனது மோட்டார் சைக்கிளை திருத்தவேண்டியிருந்ததாலும் மொபைல் போனிற்கான மாதாந்த கட்டணத்தை செலுத்தவேண்டியிருந்ததாலும் நான் அவர்களிடமிருந்து 30000 ரூபாவைப் பெற்றுக்கொண்டேன் என அவர் தெரிவித்துள்ளார். அவர்கள் என்னிடமிருந்து எனது அடையாளஅட்டையின் விவரங்களையும் அடையாள அட்டையுடன் நான் காணப்படும் செல்பியையும் கேட்டனர் என பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் மொபைல்போனை பயன்படுத்தி என்னை விண்ணப்பப்படிவமொன்றை பூர்த்தி செய்யுமாறு கேட்டனர் அதன் பின்னர் அவர்கள் எனது வங்கிக் கணக்கிற்கு பணத்தை அனுப்பினார்கள் எனவும் அவர்

நான் முதலில் கடனை பெற்ற பின்னர் நான் பெறக்கூடிய கடனை அவர்கள் அதிகரித்தனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நான் பணத்தை திருப்பி செலுத்தவேண்டிய தினத்தன்றும் அதற்கு மறுநாளும் எனக்கு தொலைபேசி அழைப்புகள் வந்தன அவர்கள் நான் பணத்தை செலுத்தவேண்டியுள்ளதை நினைவுபடுத்தினார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது நாள் பலரிடமிருந்து எனக்கு மிரட்டும் அச்சுறுத்தும் அழைப்புகள் வந்தன அவர்கள் எனது படங்களும் தொலைபேசி விவரங்களும் தன்னிடம் உள்ளதாக தெரிவித்தனர் படங்களை அம்பலப்படுத்தினால் என்ன நடக்கும் என நினைத்து பார்க்குமாறு அவர்கள் மிரட்டினார்கள் பணத்தை மீள செலுத்துமாறும் அல்லது பிரச்சினை எனவும் எச்சரித்தனர் என அந்த நபர் தெரிவித்துள்ளார்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இனிமேல் தமிழீழ தனிநாடுதான் தமிழ் அரசுக் கட்சியின் இலக்கா?

தமிழ் அரசுக் கட்சியின் தலைவராகச் சிறீதரன் வெற்றிபெற்றுள்ளார். அதைத் தொடர்ந்து நேற்று அவர் ஒரு அறிக்கை விடுத்திருந்தார். அந்த அறிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக – புலிகளின் காலத்தில் – ஒன்றித்திருந்த கட்சிகள் அனைத்தையும் மீளவும் வரும்படி அவர் அழைப்பு விடுத்திருந்தார். குறிப்பாக 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் கூட்டமைப்பு இருந்த ஏகப் பிரதிநிதிகள் என்கிற நிலைக்குத் திரும்பவேண்டும் என்பதே தனது விருப்பம் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். அதற்காகத் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைக்கத் தான் உழைக்கப் போகிறார் என்றும் சிறீதரனின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைக்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக குரல் கொடுத்த, மக்களுக்காக அரசியல் பணி செய்த சக தமிழ்த் தேசியக் கட்சிகள் சிலபல காரணங்களால் பிரிந்து தனிவழியே பயணிக்கின்றன. இது எமது பொது எதிரிக்கே சாதகமானது.

அதன் விளைவை கடந்த தேர்தல்கள் எமக்கு உணர்த்தியிருந்தன. 2009க்கு முன்னர் கூட்டமைப்பு எப்படித் தமிழ் மக்களின் அசைக்கமுடியாத சக்தியாக மிளிர்ந்ததோ, அதே நிலையை மீண்டும் எட்டவேண்டும் என்பதே தமிழ் மக்களின் பெருவிருப்பம்.

எனது விருப்பமும் அதுவே. இப்போது அதற்கான காலம் கனிந்துள்ளது. இதற்காக அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் கடந்த கால கசப்பான நினைவுகளைக் களைந்து ஒன்றிணையுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

தமிழ் மக்களின் நலனுக்காகவும் தமிழ்த் தேசியத்தின் நலனுக்காகவும் ஓரணியில் ஒன்றித்திருப்பது எம்முன்னால் உள்ள பெரும்பொறுப்பு. அதற்காக தமிழ் அரசுக் கட்சி மட்டுமல்லாது, சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஓரணியில் திரண்டு உழைக்கவேண்டும். சகல தமிழ்த் தேசியக் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் செயற்பாட்டை துரிதகதியில் முன்னெடுக்கவுள்ளேன். அதன் மூலம் மக்களின் உரிமைகளையும், மாவீரர்களின் கனவுகளையும் வென்றெடுப்போம் –என்றார்.

தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் செயற்பாடுகளை அவர் முன்னெடுக்க இருப்பது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் அது கடந்த காலங்களைப் போன்று வெறும் தேர்தல் வாக்கு வேட்டை அரசியலாக இருக்கக்கூ–டாது. கொள்கைத் தெளிவுடன் கட்சிகள் இணைந்து செயற்பட முன்வரவேண்டும். தங்கள் அரசியல், பொருளாதார, சுற்றுச் சூழல் கொள்கை என்ன என்பதை கட்சிகள் இணைந்து கொள்கைப் பிரகடனமாக மக்கள் முன் வைக்கவேண்டும்.

சிறீதரனின் அறிக்கையின் இறுதிவரி தமிழ் அரசுக் கட்சியின் கொள்கை என்ன எந்தக் கொள்கையை முன்வைத்து கூட்டமைப்பின் மீள் இணைவுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது என்பன போன்ற கேள்விகளை எழுப்பியுள்ளது. அவரது அறிக்கையின் இறுதி வரி மாவீரர்களின் கனவுகளை வென்றெடுப்போம் என்கிறது. மாவீரர்களின் கனவு என்பது தனித் தமிழீழ நாடு. அவர்கள் அதற்காகத்தான் உறுதிமொழியேற்று சயனைட்டை கழுத்தில் அணிந்தார்கள். ”புலிகளின் தாகம்; தமிழீழத் தாயகம்” என்பதுதான் போராளிகளின் கனவு. அவர்கள் அதற்காக மட்டுமே வாழ்ந்தார்கள், உழைத்தார்கள், உயிர்த் தியாகம் செய்தார்கள். அமைதிப் பேச்சுக்கள் தீர்வு முயற்சிகள் எல்லாமே, அவர்களைப் பொறுத்தவரையில் தனிநாட்டுக்கான பாதை மட்டுமே.

சிறீதரனின் அறிக்கையின்படி இனிமேல் தமிழ் அரசுக் கட்சியும் தமிழீழ தாயகம் என்கிற தனிநாட்டுக்காகத்தான் பாடுபடப்போகிறதா? அந்த நோக்கத்தில்தான் மற்றைய கட்சிகளையும் அவர் தம்மோடு இணையச் சொல்கிறாரா? கூட்டமைப்பாக மீண்டும் இணைதல் என்பது தனிநாட்டுக்கான கோரிக்கையை முன்வைத்ததா? அப்படியென்றால் 2009க்குப் பின்னர் இத்தனை வருடகாலம் தமிழ் அரசுக் கட்சி கூறிவந்த ”ஒருங்கிணைந்த, பிரிக்கப்படமுடியாத நாட்டுக்குள் சமஷ்டி” தீர்வு என்கிற தமிழ் அரசுக் கட்சியின் கொள்கையிலிருந்து அது விலகிவிட்டதா? இது கட்சியின் முடிவா அல்லது புதிய தலைவரின் தன்னிச்சையான முடிவா? என்று பல கேள்விகளை அந்த அறிக்கை எழுப்புகின்றது.

இத்தனை கேள்விகளையும் வைத்துக்கொண்டு மக்களை உணர்ச்சிவசப்படுத்தி ஏமாற்றி ஒரு தேர்தல்கால ஒற்றுமையைஏற்படுத்திஆசனங்களைக்கைப்பற்றிக்கொண்ட பின்னர் மீண்டும் கொள்கை முரண்பாடு என்று ஒவ்வொ–கட்சியும் நவக்கிரகங்களாக ஒவ்வொ–ரு பக்கம் திரும்பி நிற்க இனியும் அனுமதிக்க முடியாது. இது மக்கள் விழித்துக்கொண்டிருக்கும் நேரம்.



# மனநலம் காப்போம்

**நாகராஜன்**

உலக அளவில் மனிதர்களிடம் உள்ள குறைபாட்டில் மன அழுத்தமே முதலிடத்தில் உள்ளது. முன்கூட்டிய இறப்புக்கான காரணங்களில் 10ஆவது இடத்தில் மன அழுத்தம் உள்ளது. 15 முதல் 29 வயதுக்கு உட்பட்டவாகளின் இறப்புக்கு இரண்டாவது காரணம் தற்கொலை. மன அழுத்தத்துக்கும் தற்கொலைக்கும் தெருங்கிய தொடர்பு உண்டு.

கொள்ளைநோய்த்தொற்றுக்கு முன் உலகளவில் 8 பேரில் ஒருவா மனநல பிரச்னையுடன் வாழ்ந்து வந்ததாக மதிப்பிடப்பட்டிருந்தது. கரோனா தீநுண்மியின் முதல் ஆண்டில் கவலை மற்றும் மனசோர்வால் 25 சதவீதத்துக்கும் அதிகமானோா பாதிக்கப்பட்டனா். இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளில் பெரும்பாலானவாகள் தங்களுக்கு மனநலம் பாதிப்பு இருப்பது தெரியாமல் வாழ்வதாக மருத்துவாகள் கூறுகின்றனா்.

மன அழுத்தத்தின் அறிகுறிகள் தலைவலி, முதுகுவலி, தொடாபான சிக்கல்கள், தலைச்சுற்றல், எரிச்சல், விரைவான இதயத் துடிப்பு, மறதி போன்றவையே. அதுபோல பதற்றத்தின் பல அறிகுறிகள் மன அழுத்தத்தை போலவே இருக்கும். எண்ணங்களை அமைதிப்படுத்துவதில் சிரமம், எளிதில் சோர்வடைதல், எளிதில் பயப்படுதல், அதிக வியாவை, நெஞ்சுவலி போன்ற உணர்வு ஆகியவை ஏற்படும்.

பதற்றம் என்பது உடல் சார்ந்ததாகவும் இருக்கலாம். மூளையில் ஏற்படும் இரசாயன மாற் றங்கள் தொடாந்து நீடித்திருப்பதால் அவை மனப் பதற்றத்துக்குக் காரணமாகும் என்கின்றனா மருத்துவாகள். ஆண்களைவிட அதிக மன அழுத்தத்துக்கு ஆளாகிறார்கள். ஆண்களிடையே 29.3 சதவீத மாக உள்ள மன அழுத்தம் பெண்களிடையே 41.9 சதவீதமாக உள்ளது.

வன்முறை மோதல்கள், உள்நாட்டு போர்கள், பேரழிவுகள், இடம்பெயாவுகளால் பாதிக்கப்பட்ட மக்களில் 80 சதவீதம் பேர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஒருவர் மன அழுத்தத்தோடு இருந்தால் அவரின் சுவாச அமைப்பு பாதிப்படைந்து மூச்சு விட சிரமப்படுவாா். ஆக்சிஜன் பற்றாக்குறையால், குருதி ஓட்டம் சீராக இருக்காது. மன நோய் எதிர்ப்பு சக்தியை அழித்துவிடும். மன அழுத்தத்தால் தோள்பட்டை, கழுத்து, முதுகு ஆகிய பகுதிகளில் வலி ஏற்படும்.

மன அழுத்தத்தின்போது உணவுப் பழக்கம் மாறும். அதை இரைப்பை ஏற்காது. இதனால் வயிற்று வலி, வாந்தி, குமட்டல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும். ஒரு நபா தொடாந்து ஒரே அளவிலான மன அழுத்தத்தில் இருந்தால் அவருக்கு மாரடைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்று மருத்துவர்கள் கூறுகின்றனா.

பொதுவாக ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு மன நல மருத்துவாகள் இருக்க வேண்டும். ஆனால் இலங்கையில் அப்படியெல்லாம் கிடையாது. மனப் பதற்றம் அதிகரிப்பதாக நாம் உணாந்ததுமே ஆழமாக மூச்சை இழுத்துவிட்டு அதிலேயே மனதை குவிப்பதன் மூலமாக மனப் பதற்றத்தைக் குறைக்க முடியும். மேலும் நம்மைச் சுற்றியுள்ள ஐந்து நபாகளையோ, பொருள்களையோ பார்க்கவேண்டும்.

அடுத்து அருகேயுள்ள நான்கு பொருள்களைத் தொடவேண்டும். அது தரையாகவோ, பேனாவாகவோ, மனைவி வாங்கிவைத்திருக்கும் காய்கறியாகவோகூட இருக்கலாம். அடுத்து மூன்று ஒலிகளை கேட்க வேண்டும். இரு வாசனைகளை நுகரவேண்டும். பின்னா ஒரு சுவையை உணரவேண்டும்.

இந்த ஐந்தையும் செய்து முடித்த பின் நம் பதற்றம் தணிந்திருப்பதை உணர முடியும். வெளிநாடுகளில் ஒரு லட்சம் பேருக்கு ஆறு மன நல மருத்துவர்கள் இருக்கிறார்கள். இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பகுதிகளில் கூட போதிய அளவில் மனநல மருத்துவர்கள் நியமிக்கப்பட்டதில்லை.

மன நலம் சரியில்லாத ஒருவரை விவரிக்க இழிவான சொற்கள் பயன்படுத்தப்படுவதை தவிர்க்கவேண்டும். மனநோய்க்கு சரியான வழிகாட்டுதலின் சரியான மருத்துவம் தரப்படுவது முக்கியம். குடும்பத்தினரின் அன்பு மிக அவசியம். தினமும் இரவில் குறிப்பிட்ட நேரத்தில் தூங்கி காலையில் குறிப்பிட்ட நேரத்தில் எழ வேண்டும். துங்குவதற்கு 2 மணி நேரத்துக்கு முன் சாப்பிட வேண்டும்.

தொலைக்காட்சி பார்ப்பது, செல்போன் பயன்படுத்துவதை தூங்குவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னதாகவே நிறுத்தவேண்டும். நாள்தோறும் 45 நிமிடம் உடற்பயிற்சி செய்யவேண்டும். அது, நடைப்பயிற்சியாகக்கூட இருக்கலாம். தூங்கும் இடம் சுத்தமாக இருக்கவேண்டும்.

நம் மனம் உரிமை. மன நலத்தைப் பாதுகாக்க முதலில் நம்மை நாம் நேசிக்கவேண்டும். நம்பிக்கைக்குரிய நபர்களிடம் பேசவேண்டும். ஆரோக்கியமான உணவு, வாழ்க்கை முறைக்கு மாறவேண்டும். பிடித்ததைச் செய்ய வேண்டும். இதனால், மனமும் உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

நம்மை நாமே பாராட்டிக் கொள்ளலாம். கவலையை துறந்து மகிழ்ச்சியை நாடுவோம். மன அழுத்தத்துக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மனநல பாதிப்பு தொற்றுநோயைவிட நீண்ட காலம் நீடிக்கும் என்கிறாா ஐ.நா. சபை பொதுச் அன்டோனியோ குட்டரெஸ். தங்கள் வாழ்க்கையை கண்ணியமாகவும், தன்னம்பிக்கையுடனும் வாழ மனநோயால் பாதிக்கப்பட்டவாகளுக்கும் உரிமை உண்டு. மகிழ்வான தருணங்கள் அவாகளுக்குத் தொடரட்டும்.



**மன அழுத்தத்தின் அறிகுறிகள் தலைவலி, முதுகுவலி, தொடாபான சிக்கல்கள், தலைச்சுற்றல், எரிச்சல், விரைவான இதயத் துடிப்பு, மறதி போன்றவையே. அதுபோல பதற்றத்தின் பல அறிகுறிகள் மன அழுத்தத்தை போலவே இருக்கும். எண்ணங்களை அமைதிப்படுத்துவதில் சிரமம், எளிதில் சோர்வடைதல், எளிதில் பயப்படுதல், அதிக வியாவை, நெஞ்சுவலி போன்ற உணர்வு ஆகியவை ஏற்படும்.**

# மருந்துகள் பற்றாக்குறைக்கு மத்தியில் நோயாளர்களின் உணவிற்கும் ஆபத்து

## பொருளாதார நெருக்கடியே காரணமாம்

உணவுப்பொருள்களின் விலை அதிகரிப்பால் அரசாங்க மருத்துவமனைகளில் நோயாளர்களிற்கு வழங்கப்படும் உணவின் தரத்தில் குறைபாடு காணப்படுவதாக வெளியாகும் குற்றச்சாட்டுகளால் அரசாங்க மருத்துவமனைகள் கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

உணவுப்பொருள்களின் விலைகள் அதிகரிப்பு மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு இலவச உணவில் தங்கியிருப்பது போன்றவற்றின் காரணமாக அதிகரிக்கும் கஸ்டங்கள் குறித்து துறை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மருத்துவமனைகளில் அனுமதி பெறும் நோயாளர்களின்எண்ணிக்கைகுறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது எனத் தெரிவித்துள்ள அவர்கள் தனியார் மருத்துவமனைகளில் அறவிடப்பட்டும் கட்டண அதிகரிப்பு காரணமாகவே அதிகளவு மக்கள் அரசமருத்துவமனைகளை நாடுகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக அரசாங்க மருத்துவமனைகளில் வழங்கப்படவேண்டிய இலவச உணவின் அளவும் அதிகரித்துள்ளது.

இது ஏற்கனவே பலவீனமாக உள்ள வளங்கள் மீது மேலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் நோயாளிகள் இலவச உணவைக் குறைவு அவர்களை வந்து பார்ப்பவர்களிடமிருந்துஉணவுகிடைப்பதும் ஒரு காரணம் எனத் தெரிவித்துள்ள முக்கியமான அரசாங்க மருத்துவமனையின் அதிகாரியொருவர் ஆனால் தற்போது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. பலர் தற்போது இலவச உணவை நம்பியுள்ளனர். மேலும் நோயாளிகளைப் பார்வையிட எவரும் வருவதும் இல்லை. மருத்துவமனைகள் நிரம்பிவழிகின்றன. உணவுப்பொருள்களின் தரங்கள் குறைவடைகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உணவை விநியோகிப்பவர்கள் ஊட்டச்சத்து மிக்க உணவை வழங்குவது குறித்து சிந்திப்பார்களா என்பது தெரியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதும்மருத்துவமனைகளில்வழங்கப்படும் உணவை நம்பியிருக்கும் நிலைமையும் சுகாதார சேவையை வழங்குபவர்களிற்கும் நோயாளிகளிற்கும் சவாலான நிலையை உருவாக்கியுள்ளது.

வளங்கள் பற்றாக்குறை தெளிவாகத் தென்படுவதுடன் உணவுப்பொருள்களின் ஊட்டச்சத்து குறித்து மாத்திரமல்லாமல் இலவச உணவுத் தேவையை அரசாங்க மருத்துவமனைகளால் தொடர்ந்து பூர்த்தி செய்ய முடியுமா என்ற கரிசனையும்; எழுந்துள்ளது.

உணவுப்பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளதால் உணவின் தரம் பாதிக்கப்படுகின்றது என கவலை வெளியிட்டுள்ள சுகாதார அதிகாரிகள் நோயாளர்களிற்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து தரத்தை இது பாதிக்கின்றது எனவும் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக தற்போதைய உணவு விநியோகம் குறித்து மறு ஆய்வு செய்ய வேண்டிய நிலையேற்பட்டுள்ளது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த சவால்கள் காரணமாக நோயாளர்களின் நலனை உறுதி செய்யக்கூடிய நிலையில் மருத்துவமனைகள் உள்ளனவா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. (05)

# ஐஸ் போதைப் பொருளை நாயுடன் கடத்திச் சென்றவர்கள் மூவர் கைது

## பொலிஸார் சோதனையிடாமல் பயமுறுத்த புதிய உத்தி

பொலிஸாரைப் பயமுறுத்துவதற்காக நாயுடன் காரில் கடத்திச்செல்லப்பட்ட ஐஸ் போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டனர் என கஹதுடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் மற்றும் நான்கு கைத்தொலைபேசிகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் கிரிவத்துடுவ யகஹலுவ பிரதேசத்தில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கிரிவத்துடுவயகஹல்வபிரதேசத்தின் ஊடாக ஐஸ் போதைப்பொருள் கடத்தப்படுவதாககிடைத்ததகவலின்படி பதில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் பணிப்புரையின்பேரில் அதிகாரிகள் குழுவொன்று கிரிவத்துடுவ யகஹலுவ பிரதேசத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதன்போது அங்குமேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். (05)

# மனைவியினது சகோதரனை கொத்திக் கொன்றவர் கைது

மது போதையில் தனது மனைவியை தாக்கிய சகோதரனை கல் மற்றும் கோடரியால் தாக்கி கொலை செய்த கணவர்தெஹியோவிட்ட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர் 43 வயதுடைய நபராவார்.

குறித்த சம்பவத்தின் போது, உயிரிழந்தவர் மது போதையில் வீட்டிற்கு வந்த நிலையில் தனது சகோதரியை தாக்கியுள்ளார். இதனை அவதானித்த அவரது கணவர் மனைவியின் சகோதரனை கோடாரி மற்றும் கல்லால் பலமாக தாக்கியுள்ளார்.

இந்நிலையில் தாக்குதலுக்குள்ளானவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பொலிஸார் போன்று தொலைப்பேசியூடாக உரையாடி பணமோசடி செய்துவரும் கும்பல்

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பல வீடுகளிலுள்ள தொலைபேசிகளுக்கு அழைப்பெடுத்து, தம்மை பொலிஸார் எனக் கூறி, ஏமாற்றி பணம் பறிக்க முற்படும் கும்பலொன்று தலைமறைவில் இயங்கி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, முல்லேரியா, நவகமுவ பிரதேசங்களில் உள்ள வீடுகளுக்கு இதுபோன்ற அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும், பொலிஸார் எனக் கூறி பணம் அழைப்பு விடுக்கப்படுவது தொடர்பில் பொலிஸ் நிலையங்களுக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளனர். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# கண்காணிப்பு சீ.சீ.ரீ.வி. கட்டமைப்புக்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் எதிர்ப்பு

கொழும்பில் போக்குவரத்து விதிகளை மீறுபவர்களை கண்டறியும் நோக்கில் பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு கமெரா செயற்பாடுகள் நேற்று(திங்கட்கிழமை) முதல் அமுலுக்கு வருகின்றன.

கொழும்பில் உள்ள 33 முக்கிய இடங்களில் பொருத்தப்பட்டுள்ள சிசிரிவி கமெராக்கள் மூலம் போக்குவரத்து விதிகளை மீறுபவர்கள் கண்டுபிடிக்கப்படவுள்ளனர்.

இதன்படி, குற்றவாளிகளாகக் கண்டறியப்படுபவர்கள் செலுத்தவேண்டிய அபராதப்பத்திரம் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர்களின் முகவரிக்கு அனுப்பப்படும்.

இதேவேளை, கொழும்பில் போக்குவரத்து விதிகளை மீறுபவர்களைக் கண்டறியும் பொலிஸாரின் சிசிரிவி திட்டத்துக்கு இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை தனியார் பஸ் சங்க தலைவர் கெமுனு விஜேரத்ன இது தொடர்பில் தெரிவிக்கையில், இந்த வேலைத்திட்டத்தின் கீழ் பஸ்களை ஒழுங்குபடுத்த வேண்டுமாயின் பஸ் முன்னுரிமைப் பாதை சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். - என்றார்.

ஓட்டோக்கள் உட்பட ஏனைய வாகனங்கள் பஸ் பாதையில் பயணிப்பதால் பஸ்களை இயக்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (05)

# ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுடன் தொடர்பு என்று இராணுவ அதிகாரி கைது

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுடன் தொடர்பு கொண்டிருந்த குற்றச்சாட்டில் இராணுவ அதிகாரி ஒருவரைப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். கஹதுடுவ, உஸ்வத்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த இராணுவ அதிகாரி கைது செய்யப்பட்டார் என பொலிஸ் அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஜூன் மாதம் 21 ஆம் திகதி பலப்பிட்டிய பிரதேசத்தில் நபர் ஒருவரைச் சுட்டுக் கொன்ற சம்பவம் மற்றும் 18 ஆம் திகதி பலபிட்டிய பிரதேசத்தில் கொலை செய்ய திட்டமிட்டமை தொடர்பில் சந்தேகநபர் தேடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சோதனையின் போது சந்தேகநபரின் வீட்டில் 18 கிராம் ஐஸ் போதைப்பொருளும் கண்டுபிடிக்கப்பட்டது. (05)

# மதுபோதையில் காரைச் செலுத்தி விபத்தை ஏற்படுத்திய 4 பேர் கைது

மது போதையில் காரை செலுத்தி இரு சைக்கிள்களை மோதி விபத்துக்குள்ளாக்கி தப்பிச் சென்ற சாரதி உட்பட 4 பேர் பேலியகொடை பொலி-ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவர் காயமடைந்து ராகமை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் போது சந்தேக நபர்கள் திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்டு மதுபோதையில் திரும்பிச் சென்று கொண்டிருந்த போது கொழும்பு - கண்டி வீதியில் களனி பிரதேசத்தில் வைத்து 2 சைக்கிள்களை மோதி விபத்துக்குள்ளாக்கியுள்ளனர்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் சம்பவ இடத்திலிருந்து தப்பிச்சென்றுள்ள நிலையில் வத்தளை - ஹேகித்த பிரதேசத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)

# புதையல் தோண்டிய நால்வர் கஹதுடுவ பொலிஸால் கைது

கிரிவட்டுடுவ பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றின் முன்பாக புதையல் தோண்டிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வர் கஹதுடுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதையல் தோண்டுவதாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இளம் தம்பதிகள், பெண்ணின் சகோதரர் மற்றும் வெளிநாட்டவர் ஒருவரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது தண்ணீர் மோட்டர், மண்வெட்டிகள், இரும்பு கத்திகள் போன்ற பல உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸார் இவர்களிடம் விசாரணை மேற்கொண்ட போது கிணறு தோண்டப்போவதாக இவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர் எனவும் புதையல் தோண்டிய இடத்தில் எட்டு அடி ஆழமும், 6 அடி அகலமும் தோண்டப்பட்டிருந்தன பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைதானவர்கள் கெஸ்பேவ நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கஹதுடுவ பொலிஸார் மெற்கொண்டு வருகின்றனர். (05)

# போதைப் பொருள் கடத்தல்காரர் குடுசலிந்துவுக்கு சொந்தமாக 79 வாகனங்கள்; கடத்தலுக்கு பயன்பாடு



சலிந்து என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியும் பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல்காரனுமான பாணந்துறை சலிந்து 79 சொகுசு வாகனங்களை வைத்திருப்பதாகவும் அவற்றின் இலக்கத் தகடுகள் மாற்றப்பட்டு போதைப்பொருள் வலையமைப்பில் ஈடுபட்டுள்ளன எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

26 வயதுடைய குடு சலிந்து பல்வேறு நபர்களின் பெயர்களில் 48 வங்கிக் கணக்குகளை பராமரித்துவந்துள்ளார் எனபதில்பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

மூன்றாண்டுகளுக்குள் இந்த நாற்பத்தெட்டு கணக்குகளில் மில்லியன் ரூபா பணம் புழக்கத்தில் விடப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, இலங்கையில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் 4,500 பேரின் விவரப் பட்டியல் புலனாய்வுப் பிரிவினராலும் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினராலும் தயாரிக்கப்பட்டு அந்தந்த பகுதிகளின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (05)



# மேற்குலக நாடுகளிடம் இருந்து அழுத்தம் வந்தாலும் உக்ரைன் விவகாரத்தில் நடுநிலை பேணவேண்டும்

## ரஸ்ய தூதுவர் தெரிவிப்பு

மேற்குலக நாடுகளிடமிருந்து இலங்கை அழுத்தங்களை போதிலும் உக்ரைன் விடயத்தில் தொடர்ந்தும் இலங்கை நடுநிலைமையை பேணவேண்டும் என ரஸ்யா எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது

பேட்டியொன்றில் இலங்கைக்கான ரஸ்ய தூதுவர் லெவன் ஜகர்யான் தெரிவித்துள்ளார்.

பேட்டியொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

**கேள்வி:** பாதுகாப்பு ஒத்துழைப்பு என்பது உக்ரைன் ரஸ்ய மோதல் இடம்பெறும் சூழமைவில் மேற்கு ஆசியாவில் நெருக்கடி காணப்படும் சூழமைவில் முன்வைக்கப்படுகின்றது. ஆகவே இலங்கையுடன் எந்தவகையான பாதுகாப்பு ஒத்துழைப்பை பேணுவவதற்கு ரஸ்யா விரும்புகின்றது?

**பதில்:** முதலில் நான் ஒன்றை விரும்புகின்றேன். எங்களைப்பொறுத்தவரை இது ரஸ்ய உக்ரைன் யுத்தம் இல்லை. இது ரஸ்யா ஆரம்பித்துள்ள விசேட நடவடிக்கை.

இது ரஸ்யாவிற்கும் மேற்குலகிற்கும் இடையில் உக்ரைனில் இடம்பெறும் மோதல்.

மேற்குலக நாடுகள் ரஸ்யாவிற்கு தோல்வியை ஏற்படுத்த விரும்புகின்றன மூலோபாய தோல்வியை ஏற்படுத்த முயல்கின்றன,

ஆனால் நாங்கள் உக்ரைனின் கைப்பொம்மை ஆட்சியாளர்களையும் அவர்களது வெளிநாட்டு அனுசரணையாளர்களையும் தோற்கடிப்போம்.

இலங்கையை பொறுத்தவரை நாங்கள் இலங்கையர்களுக்கான கல்வி குறித்து பேசுகின்றோம்.

**கேள்வி:** கல்வி என்றால்...?

**பதில்:** இராணுவத்தினருக்கு எனத் தெரிவிக்கலாம், மாணவர்களுக்கான கல்வி குறித்து நாங்கள் ஆராய்கின்றோம் பொதுமக்களிற்கு மாத்திரமில்லை இராணுவத்தினருக்கும்.

கேள்வி: பாதுகாப்பு நோக்கில் இலங்கை மூலோபாய ரீதியில் அமைந்துள்ளதை எவ்வாறு கருதுகின்றீர்கள்?

**பதில்:** இலங்கையின் மூலோபாயரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடம் மிகவும் முக்கியமானது. மேலும் உக்ரைன் தொடர்பில் இலங்கையின் சமநிலையான நடுநிலையான நிலைப்பாட்டை நாங்கள் பாராட்டுகின்றோம்.

மேற்குலகிடமிருந்து நீங்கள் அழுத்தங்களை எதிர்கொள்கின்ற போதும் நீங்கள் இந்த நடுநிலையான நிலைப்பாட்டை பேணவேண்டும் என நாங்கள் .

மேற்குடனும் கிழக்குடனும் இலங்கை சிறந்த உறவுகளைபேணவேண்டியது அவசியம்.

**கேள்வி:** இலங்கை ஜனாதிபதி இலங்கையின் வெளிவிவகார கொள்கை ஆசியாவை அடிப்படையாக கொண்டது எனத் தெரிவித்துள்ளார். ஆகவே ரஸ்யா இதனை எவ்வாறு பார்க்கின்றது?

**பதில்:** வரலாற்றுரீதியாக இலங்கை எங்களின் நெருங்கிய நண்பன் என்பதால் இது சாதகமான விடயம். இலங்கையுடன் எங்களிற்கு எப்போதும் பிரச்சினைகள் இருந்ததில்லை, பல இலங்கையர்கள் ரஸ்ய முன்னாள் சோவியத்ஒன்றிய பல்கலைகழுங்களில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளனர். நாங்கள் இது குறித்து பெருமிதம் கொள்கின்றோம், அவர்கள் முக்கியமான பதவிகளை வகித்துள்ளார்கள்.

ரஸ்யாவிற்கும் இலங்கைக்கும் இடையில் மேலும் உறவுகளை வலுப்படுத்துவதில் ஊக்குவிப்பதில் இது உதவியாக அமைந்துள்ளது.

உக்ரைன் விவகாரத்தின் அடிப்படையில் நாங்கள் மீண்டும் இலங்கையை பாராட்டுகின்றோம் இலங்கை நடுநிலைமையான சமநிலையான நிலைப்பாட்டை பின்பற்றியுள்ளது .

ரஸ்யாவிற்கு எதிரான தடைகள் பயனற்றவை என்பதால் கொழும்பு தடைகள் விடயத்தில் மேற்குலகுடன் இணைந்துகொள்ளவில்லை.

**கேள்வி** -இரண்டு நாடுகளினதும் ஜனாதிபதிகள் சந்திப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதா?

**பதில்**-பிஆர்ஐ உச்சிமாநாட்டின் போது இதற்கான சிறந்த கிடைத்தது, நான் அறிந்தவகையில் அவர்கள் கைகுலுக்குவதில் மாத்திரம் ஈடுபட்டனர் இரண்டு தலைவர்களும் மும்முரமாகயிருந்ததாலும் முன்கூட்டியே அவர்களது நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டதாலும் அவர்களால் கைகுலுக்கலிற்கு அப்பால் செல்ல முடியவில்லை.

அடுத்த முறை ஏதாவது ஒரு சர்வதேச மாநாட்டில் அவர்கள் சந்திக்கலாம்.

பிரிக்ஸ் அமைப்பின் தற்போதைய தலைவராக ரஸ்யா மாறியுள்ளது உங்களிற்கு தெரியும், பிரிக்ஸ் பாரிய அமைப்பாக மாறியுள்ளது பல நாடுகள் அதில் தங்களை இணைந்துகொண்டுள்ளன.

**கேள்வி**- இலங்கை பிரிக்ஸ் அமைப்பில் இணைந்து கொள்வதற்கு விருப்பம் உங்கள் கருத்து என்ன?

**பதில்**-இதில் எந்த பிரச்சினைகளும் உள்ளதாக நான் கருதவில்லை இதற்கான அளவுகோல்கள் உள்ளன இலங்கையை பொறுத்தவரை இது பிரச்சினையான விடயமல்ல பிரிக்சில் உள்ள அனைத்து நாடுகளுடனும் இலங்கை நல்லுறவை கொண்டுள்ளது.

**கேள்வி:** ரஸ்ய உக்ரைன் மோதல் எவ் வளவு காலம் நீடிக்கும் என கருதுகின்றீர்கள் ?

**பதில்:** ரஸ்யாவின் போர் திறமையை உக்ரைனின் போர்திறமையுடன் ஒப்பிடமுடியாது என்பதால் போர் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதை தெரிவிக்க முடியாது

மேற்குலகின் உதவியால் உக்ரைன் தொடர்ந்து சமாளிக்கின்றனர்.

ஆனால் அவர்களின் திறமைகள் குறைவடைந்தால் - அமெரிக்காவில் தேர்தல் நடைபெற்றால் ஐரோப்பா பொருளாதார பெரும்பிரச்சினைகள் எதிர்கொண்டால் ஜேர்மனியில் என்ன நடக்கின்றது என பாருங்கள் பணிப்பகிஸ்கரிப்புகள் இடம்பெறுகின்றன ஜேர்மனி உக்ரைனில் உள்ள கைப்பொம்மை அரசாங்கத்திற்கு பெருமளவு பணத்தை செலவிட்டது மக்கள் அதனால் வெறுப்படைந்துவிட்டனர்.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் பெருந்தலைவர் சம்பந்தனை சந்தித்தார்





இலங்கை தமிழரசு கட்சியின் புதிய தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரன் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனை சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்று (திங்கட்கிழமை) அவரது கொழும்பில் உள்ள இல்லத்தில் சந்தித்து ஆசிபெற்றதுடன் கட்சியின் நகர்வுகள் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடினார். (05)

## கராப்பிட்டிய வைத்தியசாலையின் வைத்தியர் பிணையில் விடுவிப்பு

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர் கிரிாந்த பெரேரா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 16ஆம் திகதி சுகாதார தொழிற்சங்கங்களின் அடையாள வேலைநிறுத்தத்தின் போது ஊழியர் ஒருவரை தாக்கிய பேரில் இவர் கைது செய்யப்பட்டு நேற்று (திங்கட்கிழமை) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இருப்பினும் மாரடைப்பு காரணமாக சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கு நீதிமன்றம் அனுமதித்ததுடன், நேற்று அவர் மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போதே காலி பிரதான நீதிவான் கிரிாந்த பெரேராவை தலா ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்க உத்தரவிட்டார். (05)

## 2 ஏக்கர் விவசாய காணி உள்ள விவசாயிகளுக்கு துப்பாக்கிகள்

### வழங்க நடவடிக்கை என்கிறார் மஹிந்த அமரவீர

2 ஏக்கர் விவசாய காணி உள்ள விவசாயிகளுக்கு தங்களது வன விலங்குகளிடம் இருந்து பாதுகாத்துக் கொள்ள துப்பாக்கிகள் வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பல்வேறு பிரதேசங்களில் உள்ள விவசாயப் பிரச்சினைகள் தொடர்பில் விவசாயிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். சட்டரீதியாக 5 ஏக்கருக்கு மேலதிகமான விவசாய காணி உள்ள விவசாயிகளுக்கு மாத்திரமே துப்பாக்கிகள் வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் வன விலங்குகளால் பயிர்களில் ஏற்படும் சேதங்கள் அதிகரித்துள்ளதால் செய்கைகளைக் கைவிடும் நிலையில் உள்ளதாக அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர். (05)

## சட்டவிரோதமான முறையில் சொத்துகளை சம்பாதித்த பெண் அஹுங்கல்லவில் கைது

அஹுங்கல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிகந்த பகுதியில் சட்டவிரோதமான முறையில் சொத்துக்களைச் சம்பாதித்தமை தொடர்பில் பெண் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் அஹுங்கல்ல பிரதேசத்தை சேர்ந்த 39 வயதுடையவராவார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரிடமிருந்து சட்டவிரோதமாக சம்பாதித்த கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் லொறி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## மாத்தறை துப்பாக்கிப் பிரயோகம்: உயிரிழந்தவர் இலக்கு அல்லவாம்



மாத்தறை, மாலிம்பட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தெலிஜ்ஜவிலவில் உள்ள கையடக்கத் தொலைபேசி உபகரண விற்பனை நிலையமொன்றில் கடந்த 20 ஆம் திகதி இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் உயிரிழந்த நபரை இலக்கு வைத்தது அல்ல என விசாரணைகளை பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 24 வயதான வெலிபிட்டிய பிரதேசத்தைச்சேர்ந்த இளைஞராவார்.

துப்பாக்கிச் சூடு நடந்தபோது கடையின் உரிமையாளர் கடையின் முன்பாக நின்று கொண்டிருந்துள்ளார். உயிரிழந்த இளைஞர் தனது கையடக்கத் தொலைபேசியை சார்ஜ் செய்வதற்காக கடைக்குள் இருந்தமை தெரிய வந்துள்ளது.

இந்த இளைஞர் கொரியாவுக்குச் செல்ல எதிர்பார்த்திருந்தார் எனவும் தெரிய வந்துள்ளதுடன் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அவர் எந்தக் குற்றத்துடனும் ஈடுபாடு கொண்டவர் அல்லர் என்பதும் வந்துள்ளது. (05)

## பொரளையில் தொடர்மாடி குடியிருப்பின் கழிவறை அருகே 15 தோட்டாக்கள் மீட்பு

கொழும்பு 8, பொரளை, சர்பன்டைன் வீதி பகுதியில் உள்ள தொடர்மாடி குடியிருப்பு ஒன்றின் கழிவறைக்கு அருகில் இருந்த குழியிலிருந்து 15 தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட தோட்டாக்களானது ரி 56 ரக துப்பாக்கி மற்றும் எம் 16 ரக துப்பாக்கிகளின் தோட்டாக்களாகும்.

தொடர்மாடி குடியிருப்பில் வசிக்கும் ஒருவர் கொழும்பு மாநகர சபை ஊழியர்களுடன் இணைந்து வீட்டின் கழிவறையை சுத்தம் செய்யும் போது இந்த தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து இது தொடர்பில் பொரளை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு வந்த குற்றப் புலனாய்வு பிரிவினர் கண்டுபிடிக்கப்பட்ட தோட்டாக்களை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுவந்துள்ளனர்.

இந்த தோட்டாக்களானது சிலநாள்களுக்கு முன்னர் குழி தோண்டப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## சகோதரருடன் ஏற்பட்ட தகராறில் கத்திரிகோலால் கொலை

பொரளை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் சகோதரர்கள் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறில் தனது சகோதரனை கத்திரிகோலால் குத்தி கொலை செய்த மூத்த சகோதரன் பொரளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கொழும்பு 8 , பொரளை, சர்பன்டைன் வீதியை சேர்ந்த 55 வயதுடைய ஐ. எச். ஜயந்த என்ற நபராவார்.

சந்தேக நபர் மது போதையில் இருக்கும் போது சகோதரருடன் தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் போது மூத்த சகோதரன் இளைய சகோதரனின் மார்பின் இடது பக்கத்தில் கத்திரிகோலால் குத்தி கொலை செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## விவசாயிகளிடம் நெல் அளக்கும் தராசுகளில் மோசடி: ஆலை உரிமையாளர் சங்கத் தலைவர் குற்றச்சாட்டு

வவுனியா மாவட்டத்தில் விவசாயிகளிடம் நெல் கொள்வனவு செய்ய வரும் வெளி மாவட்ட நெல் கொள்வனவாளர்கள் மற்றும் உள்ளூர் நெல் கொள்வனவாளர்கள் நிறுவை தராசுகளில் பாரிய மோசடி மேற்கொண்டு விவசாயிகளிடம் நெல்லை கொள்ளளவு செய்து வருகின்றனர் என வவுனியா மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர் சங்கத் தலைவர் சி. தெரிவித்தார். இந்த விடயம் தொடர் பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -



தற்போது அறுவடை ஆரம்பித்துஉள்ளநிலையில் விவசாயிகளிடம் நெல்லை கொள்வனவு செய்ய-வரும் கொள்வனவாளர்கள் நிறுவைதராசுகளில் மோசடி செய்து விவசாயிகளிடம் நெல்லை கொள்வனவு செய்கின்றனர்.

தராசில் இருக்கும் மேல்பகுதியை மாற்றி வைப்பதன் ஊடாக இரண்டு மூடைகளில் சுமார் 15 கிலோ வீதம் விவசாயிகள் நட்டமடைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன எனச் சுட்டிக் காட்டிய அவர், நியாயமாகக் கொள்வனவுசெய்பவர்களை 100, 200 ரூபா பணம் அதிகமாக கிடைக்கின்றது என்ற காரணத்தால் விவசாயிகள் அவ்வாறான கொள்வனவாளர்களிடம ;நெல்லைக் கொடுத்து பல ஆயிரம் ரூபா நட்டம் அடைந்து ஏமாறுகின்றனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

எனவே விவசாயிகள் நெல்லைவிற்பனைசெய்யும் போது மிகவும் அவதானமாக செயல்படுமாறும் அவர் கேட்டுள்ளார். (05)

## தயாசிறிக்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சரதி துஷ்மந்த மித்ரபாலவின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவுக்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் திங்கட்கிழமை மேலும் நீடித்துள்ளது.

மித்ரபால மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோர் தாக்கல் செய்த மனு திங்கட்கிழமை காலை நீதிமன்றில் விசாரணைக்கு கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தவழக்குவிசாரணைஎதிர்வரும் 29 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.(05)

## மதுபான கடத்தலில் ஈடுபட்ட நபர் கைது

40 வெளிநாட்டு மதுபான போத்தல்களை கடத்தி சென்ற நபர் ஒருவர் கல்கிசை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் .

சொகுசு காரில் இந்த மதுபான போத்தல்களை கொண்டு சென்ற இவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர் கல்கிஸ வலவ்வத்தை பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவராவார்.

இவர் வட்சப் மூலம் வாடிக்கையாளர்களுக்கு மதுபானம் விற்பனை செய்து வந்தார் எனவும், வரி செலுத்தாமல் இரகசியமான முறையில் இந்த வெளிநாட்டு மதுபானத்தை வைத்திருந்தார் எனவும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்தள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக கைதானவர் வெளிநாட்டு மது பானங்களுடன் இலங்கை சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(05)

## திருகோணமலை மீன்பிடி துறைமுகத்தில் ஆணின் சடலம் மீட்பு

திருகோணமலை கொட்பே மீன்பிடி துறைமுகத்தில் அடையாளம் தெரியாத ஆணொருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சீனகுடா பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சடலம் நேற்று (திங்கட்கிழமை) காலை 10.20 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது. அடையாளம் காணப்படாத குறித்த சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

## வெள்ளவத்தையில் பொலிஸ் என்று இளைஞரை தாக்கும் மர்ம நபர்கள்

வெள்ளவத்தை பிரதேசத்தில் பொலிஸார் என தம்மைக் கூறிய நபர்கள் இளைஞர் ஒருவரை சிலர் தாக்கும் காணொளி சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகிறது.

குறித்த இளைஞர் வீதிக்கு அருகில் நிற்பதும், குறித்த இடத்துக்கு ஓட்டோவில் வந்த சிலர் அவரை தாக்குவதும் அங்கிருந்த சிசிரிவி காட்சிகளில் பதிவாகியுள்ளது.

இந்தச் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (05)

## போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு ஏ.எஸ்.பிக்கு இலஞ்சம் கொடுக்க முயன்ற சட்டத்தரணி தொடர்பில் விசாரணை

கைது பாதாள உலகக் குழுத் தலைவனும் பாரியளவிலான போதைப் பொருள் கடத்தல்காரருமான கணேமுல்ல சஞ்சீவவுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டுவரும் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவருக்கு இலஞ்சம் கொடுக்க முயன்ற சட்டத்தரணி ஒருவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த சட்டத்தரணி போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு இலஞ்சம் கொடுக்க முற்படுகின்றமை தொடர்பான தொலைபேசிப் பதிவும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்குக்

இதேவேளை, இது தொடர்பில் விசேட பொலிஸ் விசாரணையும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(05)




JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
138, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.01.2024இல் வெளியிடப்பெற்றது.